# நல்வழி



இனிய தென்றல்

# நல்வழி

காப்பு

**பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும்இவை**
**நாலும் கலந்து உனக்கு நான்தருவேன் - கோலம்செய்**
**துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்குச்**
**சங்கத் தமிழ் மூன்றும் தா.**

கோலம் செய் - அழகு தரும்; துங்க – உயர்ந்த; கரிமுகத்து– யானை முகத்தை உடைய; தூமணியே – தூய மாணிக்க விநாயகக் கடவுளே; பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் - பாலும், தேனும், வெல்லப்பாகும், பருப்பும் ஆகிய; இவை நாலும் கலந்து – ஒன்றாக்கி; நான் உனக்குத் தருவேன் - நான் உனக்கு நிவேதனம் செய்வேன் ; சங்கத் தமிழ் மூன்றும் - சங்கம் வளர்த்த முத்தமிழையும்; நீ எனக்கு தா – எனக்குக் கொடுத்து அருள்வீராக.

விநாயகக் கடவுளே! அடியேனது பூசையை ஏற்றுக் கொள்வீராக. இயல் இசை நாடகம் என்ற முத்தமிழ்ச் செல்வமும் எனக்கு அருள்வீராக.

**1. புண்ணியம் ஆம் பாவம்போம் போனநாள் செய்த அவை**
**மண்ணில் பிறந்தார்க்கு வைத்தபொருள் - எண்ணும்கால்**
**ஈதுஒழிய வேறுஇல்லை எச்சமயத்தோர் சொல்லும்**
**தீதுஒழிய நன்மை செயல்.**

புண்ணியம் ஆம் - புண்ணியம் செய்வது ஆக்கம் தரும்; பாவம் போம் - பாவம் செய்வது அழிவு தரும்; போன நாள் - முற்பிறப்பில்; செய்த அவை – செய்த புண்ணிய பாவங்களே; மண்ணில் பிறந்தார்க்கு – பூமியிலே பிறந்தவர்க்கு; வைத்த பொருள் - தேடிவைத்த பொருளாகும்; எண்ணும்கால் - யோசித்துப் பார்த்தால்; எச்சமயத்தோர் சொல்லும் - எந்த மதத்தினர் சொல்வதும்: ஈது ஒழிய வேறில்லை - இது தவிர வேறு எதுவுமில்லை; (ஆகவே) தீது ஒழிய – தீமை செய்யாது விடுக ; நன்மை செயல் - நல்லதையே செய்க.

புண்ணியத்தால் இன்பமுண்டாகும்; பாவத்தால் துன்பமுண்டாகும். எனவே பாவத்தை ஒழித்துப் புண்ணியமே செய்ய வேண்டும்.



Rs. 40/=

2. **சாதி இரண்டுஒழிய வேறுஇல்லை: சாற்றும்கால்**
**நீதிவழுவா நெறிமுறையின் - மேதினியில்**
**இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்**
**பட்டாங்கில் உள்ளபடி.**

**பதவுரை:-** சாற்றும்கால் - சொல்லப்போனால்; மேதினியில் - பூமியிலே சாதி இரண்டு – சாதி இரண்டும் ; ஒழிய வேறு இல்லை - இவை தவிர வேறு எதுவும் இல்லை. (அந்த இரண்டு சாதியாரும் எவர்?) நீதி வழுவா நெறி – நீதி தவறாத நல்ல வழியில் நின்று; முறையின் - முறையோடு; இட்டார் - பிறர்க்கு உதவியவரே; பெரியோர் - உயர்ந்தவர்; இடாதார் -பிறர்க்கு உதவி செய்யாதவர் ; இழி குலத்தோர் - தாழ்ந்தவர்; பட்டாங்கில் உள்ளபடி – உண்மை நூல்களில் காணப்படுவதும் இதுவே.

உலகத்திலே சாதி இரண்டு தான். வேறு இல்லை, தருமம் செய்பவர் உயர்குலத்தவர்; தருமம் செய்யாதவர் தாழ் குலத்தவர்.

3. **இடும்பைக்கு இடும்பை இயல்உடம்பு இதுஅன்றே**
**இடும்பொய்யை மெய்என்று இராதே - இடும்கடுக**
**உண்டாயின் உண்டாகும் ஊழில் பெருவலிநோய்**
**விண்டாரைக் கொண்டாடும் வீடு.**

**பதவுரை:-** இயல் உடம்பு - இயங்குகின்ற இந்த உடம்பு; இடும்பைக்கு – துன்பச் சரக்குகளை; இடும் பை அன்றே – போட்டு வைக்கும் பை அல்லவா? இடும் - உணவினை இடுகின்ற; பொய்யை – பொய்யான இவ்வுடலை ; மெய் என்று இராதே – நிலையானது என்று நினைக்காதே; கடுக – விரைவாக; இடும் - வந்தார்க்கு வழங்குக; உண்டாயின் - இவ் வழக்கம் உண்டானால்; ஊழிற் பெருவலி நோய் - பந்த பாசங்களை எல்லாம்; விண்டாரை – நீக்கியவரை; கொண்டாடும் - வரவேற்றுக் கொண்டாடும்; வீடு – முத்தி; உண்டாகும் - உங்களுக்குக் கிடைக்கும்.

இந்த உடல் நிலையானது என்று எண்ணாமல் விரைவில் தருமம் செய்வேண்டும். தருமம் செய்பவற்கே முத்தியுண்டு.



Rs. 40/=

4. **எண்ணி ஒருகருமம் யார்க்கும் செய்யஒண்ணாது**
**புண்ணியம் வந்துஎய்த போதல்லால் - கண்ணில்லான்**
**மாங்காய் விழஎறிந்த மாத்திரைக்கோல் ஒக்குமே**
**ஆங்காலம் ஆகும் அவர்க்கு.**

**பதவுரை:-** யார்க்கும் - எவர்க்கும் ; புண்ணியம் - புண்ணியமானது; வந்து எய்தபோது அல்லால் - வந்து சேர்ந்த காலத்தில் அல்லாது ; ஒரு கருமம் - எந்தக் காரியத்தையும்; எண்ணி – ஆலோசித்து; செய்ய ஒண்ணாது – செய்யமுடியாது ; ஆம் காலம் - கை கூடும் காலத்திலே; அவர்க்கு ஆகும் - அது நிறைவேறும் ; (மற்றக் காலத்திலே செய்வது எல்லாம்) கண்ணிலான் - குருடன்; மாங்காய் விழ – மரத்திலே உள்ள மாங்காய் விழுவதற்காக; எறிந்த – வீசிய; மாத்திரைக்கோல் ஒக்குமே – ஊன்றுகோல் போலாகும்.

இரண்டு கண்ணும் தெரியாத குருடன் ஒருவன் மாங்காயைக் குறிபார்த்து அடிக்க நினைக்கிறான். தடவித் தடவி நடப்பதற்கு உறுது ணையாயிருக்கும் கோலை வீசுகிறான். நடப்பதற்கு உதவியாகிய கோலும் போகும்; மாங்காயும் விழா. போதாத காலத்திலே செய்யும் முயற்சிகள் இப்படித்தான் வீணாகும்.

எந்த காரியத்திற்கும் புண்ணியம் செய்திருக்க வேண்டும். இல்லா விடில் காரியம் கைகூடாது.

5. **வருந்தி அழைத்தாலும் வாராத வாரா**
**பொருந்துவன போமின் என்றால்போகா - இருந்து ஏங்கி**
**நெஞ்சம் புண்ணாக நெடுந்தூரம் தாம்நினைத்து**
**துஞ்சுவதே மாந்தர் தொழில்.**

**பதவுரை:-** வருந்தி – மிகவருந்தி; அழைத்தாலும் - வரவேற்றாலும் வாராத– கிடைக்கக் கூடாதவை; வாரா – கிடைக்கமாட்டா; பொருந்துவன –நமக்குக் கிடைக்க வேண்டியவற்றை; போமின் என்றால் - வேண்டாம் என்றாலும் ; போகா – போகா மாட்டா; (இவ்வுண்மையை அறியாமல்;) இருந்து – வாடி இருந்து; ஏங்கி – ஏக்கமுற்று; நெஞ்சம் புண்ணாக – மனம் நொந்து; நெடும் தூரம் தாம் நினைந்து – அதைப்பற்றியே நீண்டநாள் நினைத்திருந்து; துஞ்சுவதே – உயிர் விடுவதே; மாந்தர் தொழில் - மனிதரது தொழிலாகிவிட்டது.

ஆசைப்பட்ட பொருள் எல்லாமே கிடைக்கமாட்டா. வேண்டாம் என்று எண்ணுபவை வழியில் நில்லா. எவைஎவை யெல்லாம் நமக்குக் கிடைக்கவேண்டும் என்ற விதிப்பயன் இருக்கிறதோ. அவை வந்தே தீரும். வீணாக மனம் அலையக் கூடாது.

**6. உள்ளது ஒழிய ஒருவருக்கு ஒருவர்சுகம்**
**கொள்ளக் கிடையா குவலயத்தில் – வெள்ளக்**
**கடல்ஓடி மீண்டு கரையேறி னால்என்**
**உடலோடு வாழும் உயிர்க்கு.**

**பதவுரை:-** உள்ளது ஒழிய — அவரவர்க்குக் கிடைக்க வேண்டியது தவிர; ஒருவருக்கு ஒருவர் சுகம் - ஒருவனுக்கு மற்றொருவர் சுகமானது; கொள்ள – அனுபவிக்க; கிடையா — கிடைக்காது; குவலயத்தில் - பூமியில்; உடலோடு வாழும் உயிர்க்கு – உடலுடன் கூடி வாழும் இந்த உயிர்க்கு; வெள்ளக் கடல் ஓடி —அலை கடல் கடந்து ஓடிச் சென்று; மீண்டும் கரையேறினால் என் - பொருள் தேடி மீண்டுவந்து கரை சேர்ந்தாலும் என்ன சுகம் கிடைத்துவிடப் போகிறது?

கப்பல் ஏறிச் சென்று பொருள் தேடியபோதிலும் கொடுத்து வைத்த அளவுதான் சுகம் கிடைக்கும்.

**7. எல்லாப் படியாலும் எண்ணினால் இவ்வுடம்பு**
**பொல்லாப் புழுமலி நோய் புன்குரம்பை – நல்லார்**
**அறிந்திருப்பார் ஆதலினால் ஆம்கமல நீர்போல்**
**பிரிந்திருப்பார் பேசார் பிறர்க்கு.**

**பதவுரை:-** எல்லாப் படியாலும் - எல்லா வகையாலும்; எண்ணினால் - எண்ணிப் பார்த்தால்; இவ்வுடம்பு - இந்த உடம்பு; பொல்லா – பொல்லாத; புழு — புழுக்கள்; மலிநோய் - நிறைந்த பலவித நோய்களுக்கும்; புன்குரம்பை - இருப்பிடமாக இருக்கிறது ; நல்லார் - நல்ல அறிவுடைய பெரியவர்கள்; அறிந்திருப்பார் - இதை அறிந்திருப்பார்கள் ; ஆதலினால்- ஆதலினால் (அவர்கள்) ; கமல நீர்போல் - தாமரை இலைத் தண்ணீர் போல; பிரிந்து இருப்பார் - ஒட்டாது இருப்பர்; பிறருக்குப் பேசார் - பிறரிடம் அது குறித்துப் பேசவும் மாட்டார்.

உடம்பின் தன்மை அறிந்த ஞானிகள் அதன்மீது பற்றுவைக்க மாட்டார்கள்.

8. **ஈட்டும் பொருள் முயற்சி எண்ணிறந்த ஆயினும் ஊழ்**
**கூட்டும்படி அன்றிக் கூடாவாம் - தேட்டம்**
**மரியாதை காணும் மகிதலத்தீர் கேண்மின்**
**தரியாது காணும் தனம்.**

**பதவுரை:-** மகிதலத்தீர் - பூமியில் வசிக்கும் மனிதர்களே! கேளுங்கள்; முயற்சி எண்ணிறந்த ஆயினும் - அளவில்லா முயற்சி செய்தாலும்; ஊழ் கூட்டும்படி அன்றி – நல்ல காலமிருந்து கைகூடினால் அன்றி; ஈட்டும் பொருள் - தேடும் பொருள் ; கூடாவாம் - கைகூடாது; தரியாது காணும் தனம் - நல்ல காலம் இருந்தால் அன்றி அந்தப் பொருளும் நிலைக்காது; காண்பீராக! (எனவே) (தேடத் தகுந்தது) மரியாதை காணும்- மரியாதையே ஆகும்.

பெருமுயற்சி செய்து பொருள் தேடியபோதும் விதி வசமின்றேல் கிட்டாது. வந்த பொருளும் நிலையாது. எனவே நிலைத்திருப்பது மரியாதை. அதையே தேடுதல் வேண்டும்.

9. **ஆற்றுப்பெருக்கு அற்று அடிசுடும் அந்நாளும் அவ்வாறு**
**ஊற்றுப் பெருக்கால் உலகுஊட்டும் - ஏற்றவர்க்கு**
**நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்**
**இல்லை எனமாட்டார் இசைந்து.**

**பதவுரை:-** ஆற்றுப்பெருக்கு – ஆற்றிலே வெள்ளம் வருவது; அற்று – நின்று போய்; அடிசுடும் - மணல் காய்ந்து நடப்பவர் கால் சுடுகின்ற; அந்நாளும் - அந்த நாளிலும்; அவ் ஆறு – அந்த ஆறு; ஊற்றுப் பெருக்கால் - ஊற்று நீரால்; உலகு ஊட்டும் - உலகத்து மக்களை உண்பிக்கும் (அது போல); நல்ல குடிப்பிறந்தார் - உயர் குடும்பத்திலே பிறந்தவர்கள்; நல்கூர்ந்தார் ஆனாலும் - வறுமை அடைந்தாலும் ; ஏற்றவர்க்கு – தம்மிடம் வந்து யாசித்தவர்க்கு; இசைந்து – மனம் விரும்பி, இல்லை என மாட்டார் - இல்லை என்று சொல்லமாட்டார்.

வறுமை வந்தபோதிலும், தம்மிடம் வந்து கேட்போர்க்கு இல்லையென்று சொல்லமாட்டார்கள் உயர்குடிப் பிறந்த மக்கள்.

**10. ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்**
**மாண்டார் வருவாரோ? மாநிலத்தீர் - வேண்டா**
**"நமக்கும் அதுவழியே நாம்போம் அளவும்**
**எமக்கு என்" என்று இட்டுஉண்டு இரும்.**

**பதவுரை:-** மாநிலத்தீர் - பெரிய பூமியிலுள்ள மக்களே! ஆண்டு ஆண்டு தோறும் – வருடக்கனக்கில்; அழுது புரண்டாலும் - அழுது புரண்டாலும்; மாண்டார் வருவரோ? இறந்தவர் திரும்பி வருவாரோ? (வரமாட்டார்) ; வேண்டா – (எனவே) அழவேண்டா ; நமக்கும் அதுவழியே – நமக்கும் அதுவேதான் வழி; நாம் போம் அளவும் - அவ்வழியே நாம் போகும் வரை; எமக்கு என் என்று – நமக்கு என்ன சம்பந்தம் இருக்கிறது என்று; இட்டு – எல்லாருக்கும் கொடுத்து; உண்டு – நீங்களும் வயிறார உண்டு; இரும் - மகிழ்ச்சியுடன் இருங்கள்.

இறந்து போனவரை நினைத்து நினைத்து அழுவதால் பயன் என்ன? மாண்டவர் மீண்டும் வரமாட்டார். "நமக்கும் ஒருநாள் மரணம் ஏற்படும்" என்று அறிந்து; தருமம் செய்யுங்கள்.

**11. ஒருநாள் உணவை ஒழிஎன்றால் ஒழியாய்**
**'இருநாளுக்கு ஏல்' என்றால் ஏலாய் - ஒருநாளும்**
**என்நோவு அறியாய் இடும்பைகூர் என்வயிற்றே**
**உன்னோடு வாழ்தல் அரிது.**

**பதவுரை:-** இடும்பைகூர் - துன்பம் மிக்க; என் வயிறே – என்னுடைய வயிறே, ஒருநாள் உணவை – ஒருநாள் சாப்பாட்டை ; ஒழி என்றால் - விட்டுவிடு என்றால் ; ஒழியாய் - விட மறுக்கிறாய், இரு நாளுக்கு – (கிடைத்தபோது) இரு நாளைக்கு, ஏல் என்றால் - ஏற்றுக்கொள் என்றால், ஏலாய் - மறுக்கிறாய், ஒரு நாளும் - ஒரு நாளாவது, என் நோவு அறியாய் - எனது துன்பம் அறியமாட்டாய், உன்னோடு வாழ்தல்- உன்னுடன் வாழ்தல், அரிது – அருமையாகும்.

வயிற்றுக்குச் சோறு தேடி இடுவதைப் போன்ற துன்பம் வேறு எதுவு மில்லை.

12. **ஆற்றங் கரையின் மரமும் அரசு அறிய**
**வீற்றிருந்த வாழ்வும்விழும் அன்றே – ஏற்றம்**
**உழுதுஉண்டு வாழ்வதற்கு ஒப்புஇல்லைக் கண்டீர்**
**பழுதுஉண்டு வேறுஓர் பணிக்கு.**

**பதவுரை:-** ஆற்றங்கரையின் மரமும் - ஆற்றினது கரையில் உள்ள மரமும்; அரசு அறிய – அரசன் அறிய அதிகாரம் செய்து பெருமையாக; வீற்றிருந்த வாழ்வும் - பெருமையோடு வாழ்ந்த வாழ்வும்; விழும் அன்றே – அழியும் அல்லவா? (ஆதலால்) ஏற்றம் - உயர்வு தருவது; உழுது உண்டு வாழ்வு – பயிர் செய்து வாழ்தல்; அதற்கு ஒப்பு இல்லை கண்டீர் - அதற்கு ஒப்பான வாழ்வு இல்லை கண்டீர்; வேறு ஓர் பணிக்கு – மற்றத் தொழில்களுக்கு; பழுது உண்டு – வீழ்ச்சி உண்டு.

உழுது பயிர் செய்யும் வாழ்க்கையே ஒப்பற்ற உயரிய வாழ்க்கையாகும்.

13. **ஆவாரை யாரே அழிப்பார்? அதுஅன்றிச்**
**சாவாரை யாரே தவிர்ப்பவர் - ஓவாமல்**
**ஐயம் புகுவாரை யாரே விலக்குவார்?**
**மெய்அம் புவிஅதன் மேல்.**

**பதவுரை:-** அம்புவி அதன்மேல் - அழகிய பூமியில்; மெய் - உண்மையாக; ஆவாரை அழிப்பார் யாரே – (நல்வினையினால் நெடுங்காலம்) உயிர் வாழ்வதற்கு விதிக்கப்பட்டவரை (இடையிலே) அழிப்பவர் எவர்? அது அன்றி – அது அல்லாமல்; சாவாரை - இறப்பவரை ; யாரே தவிர்ப்பவர் - தவிர்ப்பவர் யார்? ஓவாமல் - ஓயாது; ஐயம் புகுவாரை– பிச்சை எடுப்பவரை; யாரே விலக்குவர் - யார் தடுப்பவர்? மெய்- (இது) சத்தியமேயாம்.

விதி வசத்தால் விளையும் நன்மை தீமைகளைத் தடுக்க எவராலும் இயலாது.

14. **பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை பேசுங்கால்**
**இச்சை பலசொல்லி இடித்துஉண்கை – சீச்சீ**
**வயிறு வளர்க்கைக்கு மானம் அழியாது**
**உயிர்விடுகை சால உறும்.**

**பதவுரை:-** பேசுங்கால் - (ஆராய்ந்து) சொல்லப் போனால்; பிச்சைக்கு– பிச்சை எடுப்பதைவிட; மூத்த - இழிவில் பெரிய; குடி வாழ்க்கை – வாழ்க்கை; இச்சை பல சொல்லி - இச்சை தரும் சொல் பல கூறி;

இடித்து உண்கை – அவரை நெருங்கி வாங்கி உண்ணல்; *சீச்சி* –*சீ;* (இது என்ன செய்கை) வயிறு வளர்க்கைக்கு - இவ்விதம் வயிறு வளர்ப்பதைவிட; மானம் அழியாது– மானம் கெடாமல்; உயிர் விடுகை– உயிர் விடுவது? சால உறும் - மிக நல்லது.

பிறரிடம் பல்லை இழித்து இச்சையான வார்த்தை பேசி உண்டு மானமிழந்து உயிர் வாழ்வதைவிடச் சாவதே மிக மேல்.

**15. சிவாய நமஎன்று சிந்தித்து இருப்போர்க்(கு)**
**அபாயம் ஒருநாளும் இல்லை – உபாயம்**
**அதுவே ; மதியாகும்; அல்லாத எல்லாம்**
**விதியே மதியாய் விடும்.**

**பதவுரை:-** சிவாயநம என்று – சிவாயநம என்று; சிந்தித்து இருப்போர்க்கு– தியானித்து இருப்பவர்க்கு, அபாயம் ஒருநாளும் இல்லை – ஒருபோதும் ஆபத்து இல்லை; அதுவே உபாயம் - அதுவே துன்பத்தை வெல்லும் வழி; மதியாகும். அறிவுடைமையும் ஆகும்; அல்லாத மதி எல்லாம் - மற்ற யோசனை எல்லாம்; விதியே ஆய்விடும் - விதிப்படியே ஆகும். ஐந்து எழுத்தைச் சிந்தித்திருப்பவர்க்குத் துன்பமேயில்லை.

**16. தண்ணீர் நிலநலத்தால் தக்கோர் குணம் கொடையால்**
**கண்ணீர்மை மாறாக் கருணையால் - பெண்ணீர்மை**
**கற்புஅழியா ஆற்றால்; கடல்சூழ்ந்த வையகத்துள்**
**அற்புதமாம் என்றே அறி.**

**பதவுரை:-** தண்ணீர் - தண்ணீர் ; நில நலத்தால் - நிலத்தின் நல்ல தன்மையாலும் ; தக்கோர் குணம் கொடையால் - நல்லவர் தம் குணம் கொடையாலும்; கண் நீர்மை மாறாத கருணையால்- கண்களின் குணம், நீங்காத அருளினாலும் ; பெண் நீர்மை – பெண்ணின் குணம்; கற்பழியா ஆற்றால் - கற்பழியாமையாலும் ; கடல்சூழ்ந்த – கடலால் சூழப்பட்ட; வையகத்துள் - பூமியில் ; அற்புதம் ஆம் - வியக்கத்தக்க மேன்மை யுடையதாகும்? என்றே அறி – என்று அறிந்து கொள்.

நிலத்தின் நலத்தால் நீருக்குப் பெருமை; கொடையினால் நல்லவருக்குப் பெருமை! அருளினால் கண்களுக்குப் பெருமை; கற்பினால் பெண்களுக்குப் பெருமை என்று அறிவாயாக.

17. **செய்தீ வினைஇருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்**
**எய்த வருமோ இருநிதியம்? — வையத்து**
**அறும்பாவம் என்ன அறிந்து அன்று இடார்க்கு இன்று**
**வெறும்பானை பொங்குமோ மேல்?**

செய்த – முன் பிறவியிலே செய்த; தீவினை – தீயவினைகள்; இருக்க – காரணமாக இருக்க; தெய்வத்தை நொந்தக்கால் - தெய்வத்தை நொந்து கொண்டால்; எய்த வருமோ இரு நிதியம் - எல்லாச் செல்வமும் வந்துவிடுமோ? (வாராது) வையத்து – பூமியிலே ; பாவம் அறும் என்று – பாவம் போகும் என்று எண்ணி; அன்று இடார்க்கு – வாழ்ந்த அந்தக் காலத்திலே வழங்காதவர்க்கு ; இன்று- இந்த நாளிலே; வெறும் பானை – ஒன்றுமில்லாத வெற்றுப் பானை; பொங்குமோ – அடுப்பில் வைத்து எரித்தால் பொங்குவதுண்டோ! பொங்காது.

வறுமையால் வாடுவோர் தெய்வத்தை நொந்து கொள்வதால் பயனில்லை. தீவினையே பயனைத் தரும்.

18. **பெற்றார் பிறந்தார் பெருநாட்டார் பேருலகில்**
**உற்றார் உகந்தார் எனவேண்டாம் - மற்றோர்**
**இரணங் கொடுத்தால் இடுவர் இடாரே**
**சரணம் கொடுத்தாலும் தாம்.**

**பதவுரை:-** பேர் உலகில் - பெரியதாகிய இந்த உலகத்திலே; பெற்றார்- நம்மைப் பெற்றவர் ; பிறந்தார் - நம்முடன் பிறந்தவர்; பெருநாட்டார் - நமது நாட்டவர்; உற்றார் - நமக்கு உறவினர்; உகந்தார் - நமக்கு வேண்டியவர்; என – என்று; வேண்டார் - அன்பு பாராட்டாதவர்; மற்றோர் - உறவினர் அல்லாத மற்றவர்கள்; இரணம் கொடுத்தால் இடுவர் - (தம் உடம்பைப் பிறர்) துன்புறுத்தினால் கொடுப்பர்; சரணம் கொடுத்தாலும் இடார் - உறவினர் காலில் விழுந்து வணங்கினாலும் அவருக்குக் கொடார்.

உலோபிகள் தம்மை வேண்டியனவருக்குக் கொடுக்க மாட்டார்; துன்புறுத்துபவருக்கே கொடுப்பவர்.

**19. சேவித்தும் சென்று இரந்தும் தெண்ணீர்க் கடல்கடந்தும்**
**பாவித்தும் பாராண்டும் பாட்டு இசைத்தும் - போவிப்பம்**
**பாழின் உடம்பை வயிற்றின் கொடுமையால்**
**நாழி அரிசிக்கே நாம்.**

**பதவுரை:-** சேவித்தும் - பிறரிடத்திலே சென்று சேவகம் செய்தும்; சென்று இரந்தும் - ஒருவரிடத்திலே சென்று யாசித்தும்; தெண்ணீர்க் கடல் கடந்தும் - தெளிந்த நீரை உடைய கடலைக் கடந்து சென்றும்; பாவித்தும் - ஒன்றுமில்லாதவரை எல்லாம் பெரியவராகக் கருதியும்; பார் ஆண்டும் - பூமியை ஆண்டும்; பாட்டு இசைத்தும் - இந்திரனே சந்திரனே என்று ஒருவரைப் புகழ்ந்து பாடியும் ; நாம் - நாம்; பாழின் - வீணில்; இவ்வுடம்பை - இவ் உடலை; போவிப்பம் - போக்குகிறோம்; (எதற்காக?) நாழி அரிசிக்கே – ஒருபடி அரிசிக்காக; (எதனால்) வயிற்றின் கொடுமையால் - வயிற்றினுடைய பசிக்கொடுமையினால்.

வயிற்றின் கொடுமையால் ஒரு நாழி அரிசிக்காகப் பாழான வழியில் இந்த உடலைப் பயன் படுத்துகிறாயே! என்ன அறியாமை!

**20. அம்மி துணையாக ஆறு இழிந்தவாறு ஒக்கும்**
**கொம்மை முலைபகர்வார் கொண்டாட்டம் - இம்மை**
**மறுமைக்கும் நன்று அன்று மாநிதியம் போக்கி**
**வெறுமைக்கு வித்தாய் விடும்.**

**பதவுரை:-** அம்மி துணையாக – அம்மிக் கல்லைத் தெப்பமாகக் கொண்டு; ஆறு இழிந்தவாறு ஒக்கும் - ஆற்று வெள்ளத்திலே இறங்கியது போல இருக்கும்; (எது) கொம்மை முலைபகர்வார் தம் கொண்டாட்டம்- குவிவாகிய தனங்களை விற்கும் வேசியர்களை நம்பி மகிழ்ந்திருப்பது; மாநிதியம் போக்கி – எவ்வளவு பெருநிதி இருந்தாலும் அவ்வளவையும் போக்கி; வெறுமைக்கு வித்தாய் விடும் - வறுமைக்கு வித்திடும்; (எனவே அது) இம்மை மறுமைக்கும் நன்றன்று - இம்மைக்கும் நன்றன்று; மறுமைக்கும் நன்றன்று.

விலைமாதருடன் வாழ்பவன் அம்மியைக் கட்டிக் கொண்டு ஆற்றில் இறங்கியவன் கதியை அடைவான்.

21. **நீரும் நிழலும் நிலம்பொதியும் நெல்கட்டும்**
**பேரும் புகழும் பெருவாழ்வும் - ஊரும்**
**வருந்திருவும் வாழ்நாளும் வஞ்சமில்லார்க்கு என்றும்**
**தரும்சிவந்த தாமரையாள் தான்.**

சிவந்த தாமரையாள் - சிவந்த தாமரை மலரிலே வீற்றிருக்கின்ற திருமகள்; வஞ்சம் இல்லார்க்கு – வஞ்சகமற்ற நெஞ்சத்தினருக்கு; நீரும் - நீர்வளமும் ; நிழலும் - இருக்க வீடும்; நிலம் பொதியும் - நிலம் நிறைந்த நெற்போரையும் பயிர்கட்கும்; பேரும் - நல்ல பேரும்; புகழும் - கீர்த்தியும்; பெருவாழ்வும் - பெருமை மிக்க வாழ்வும்; ஊரும் - ஊர்களும்; வரும் திருவும் - வளரும் செல்வமும்; வாழ்நாளும் - நீண்ட ஆயுளும்; என்றும் - எந்நாளும்; தரும் - தருவாள்.

வஞ்சமற்ற நெஞ்சத்தார்க்குத் திருமகள் அருள் புரிவாள்.

22. **பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைத்துக்**
**கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்! - கூடுவிட்டு இங்கு**
**ஆவிதான் போயினபின்பு யாரே அநுபவிப்பார்**
**பாவிகாள் அந்தப் பணம்?**

**பதவுரை:-** பணத்தை – பொருளை; பாடுபட்டு – அரும்பாடுபட்டு; தேடி – சம்பாதித்து; புதைத்து வைத்து – தானும் உண்ணாது பிறர்க்கும்கொடாது பூமிக்கடியில் புதைத்து வைத்து; கேடுகெட்ட – நன்மையிழந்த; மானிடரே– மனிதர்களே; கேளுங்கள் - கேட்பீராக; கூடுவிட்டு – உடலாகிய கூட்டை விட்டு; ஆவிதான் போயின பின்பு – உயிர் போனபின்; பாவி காள் - பாவிகளே! அந்தப் பணம் - அந்தப் பணத்தை; யாரே அநுபவிப்பார் - யார் அநுபவிப்பார்?

பொருளைத் தேடிப் பின் மூட்டை கட்டிப் புதைத்து வைப்பது அறியாமை. அறவழியிலே செலவு செய்தல் வேண்டும்.

23. **வேதாளம் சேருமே வெள் எருக்குப் பூக்குமே**
**பாதாள மூலி படருமே - மூதேவி**
**சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே**
**மன்று ஓரம் சொன்னார் மனை.**

**பதவுரை:-** மன்று – நீதி மன்றத்திலே; ஓரம் - ஒருதலைப்பட்சமாக; சொன்னார் - நீதி வழங்கியவர்; மனை – வீட்டிலே; வேதாளம் சேரும்

பேய் அடையும்; வெள் எருக்குப் பூக்கும் -வெள் எருக்கு மலரும்; பாதாளமூலி படரும் - பாதாள மூலிக் கொடி படரும்; மூதேவி சென்று இருந்து வாழ்வளே - மூதேவியானவள் குடிபுகுவாள்; சேடன் குடி புகும் - பாம்பு குடிபுகும். (பாதாளமூலி - சிறுநெருஞ்சில்)

நீதி மன்றத்திலே நேர்மையின்றி ஒருவர் சார்பில் பேசினால் அவர் கெட்டு அழிவர். அவர் தம் குடியும் வீடும் பாழாகும்.

**24.** **நீறு இல்லா நெற்றி பாழ்; நெய் இல்லா உண்டிபாழ்**
**ஆறு இல்லா ஊருக்கு அழகு பாழ் - மாறில்**
**உடன் பிறப்பு இல்லா உடம்பு பாழ்; பாழே**
**மடக் கொடி இல்லா மனை.**

நீறு இல்லா — திருநீறு இல்லாத; நெற்றி பாழ் - நெற்றி பாழாகும் ; நெய் இல்லா — நெய் இல்லாத; உண்டி பாழ் - உணவு பாழாகும்; ஆறு இல்லா — ஆறு இல்லாத ; ஊருக்கு — ஊருக்கு ;அழகு பாழ் - அழகு பாழாகும்; மாறுஇல் - மாறுபடாத; உடன்பிறப்பு இல்லா— சகோதரர் இல்லாத; உடம்பு பாழ் - உடம்பு பாழாகும்; பாழே மடக் கொடி இல்லா மனை - இல்லறத்துக்கு ஏற்ற மனைவியில்லாத — வீடும் பாழே.

திருநீறணியாத நெற்றியும், நெய்யில்லாத உணவும், நதியில்லாத ஊரும், உடன்பிறப்பு இல்லாத பிறப்பும், மனைவியில்லாத வீடும் பாழ்.

**25.** **ஆன முதலில் அதிகம் செலவு ஆனால்**
**மானம் அழிந்து மதிகெட்டுப் - போனதிசை**
**எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ் பிறப்பும் தீயனாய்**
**நல்லார்க்கும் பொல்லனாம் நாடு.**

ஆன முதலில் அதிகம் - தன்னிடம் உள்ள முதலுக்கு அதிகமாக; செலவானால் - செலவானால்; மானம் அழிந்து — மானம் கெட்டு; மதிகெட்டு — அறிவு கெட்டு; போனதிசை — சென்ற இடம் எல்லாம் ; எல்லார்க்கும் - எல்லார்க்கும்; கள்ளனாய் - திருடனாய் ; ஏழ் பிறப்பும் - ஏழு பிறவியிலும்; தீயனாய் - கெட்டவனாய்; நல்லார்க்கும் பொல்லனாம் - நல்லவர்க்கும் துன்பம் செய்பவனாவான்; நாடு - இதை நீ அறிவாயாக.

வரவுக்கு மிகுந்த செலவு செய்பவன், பழி பாவங்களுக்கு ஆளாகி நாசம் அடைவான்.

**26. மானம் குலம் கல்வி வண்மை அறிவுடைமை**
**தானம் தவம் உயர்ச்சி தாளாண்மை — தேனின்**
**கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் பத்தும்**
**பசி வந்திடப் பறந்து போம்.**

பசி வந்திட — பசி வந்தால் (என்னாகும்) ; மானம் - மானமும்; குலம் - உயர் குலமும்; கல்வி — கல்வியும்; வண்மை - ஈகையும், அறிவுடைமை — அறிவும்; தானம் - கொடையும்; தவம் - த்வமும்; உயர்ச்சி — உயர்வும்; தாளாண்மை — தொழில் முயற்சியும்; தேனின் கசிவந்த — தேன்போல் இனிக்கும்; சொல்லியர்மேல் - மொழி பேசும் மங்கைமேல்; காமுறுதல் - விருப்பம் கொள்ளலும் ஆகிய; பத்தும் - இவை பத்தும் ; பறந்து போம் - விட்டு ஓடிவிடும்.

பசி வந்து விட்டால் ; மானம், குலம் கல்வி முதலியன எல்லா வற்றையும் மறந்துவிட நேரிடும்.

**27. ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டு ஒன்றாகும்**
**அன்றி அது வரினும் வந்தெய்தும் - ஒன்றை**
**நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்**
**எனையாளும் ஈசன் செயல்.**

ஒன்றை — ஒரு பொருளை; நினைக்கின் - பெற எண்ணினால்; அது ஒழிந்திட்டு — அது கிடைக்காமல்; ஒன்றாகும் - வேறு ஒன்று கிடைக்கும்; அன்றி — அல்லாமல்; அது வரினும் - அந்தப் பொருளே கிடைத்தாலும்; வந்து எய்தும் - கிடைக்கும் ; ஒன்றை — ஒரு பொருளை; நினையாத முன் - நினைப்பதற்கு முன்னால்; வந்து நிற்பினும் - வந்து நின்றாலும்; நிற்கும் - நிற்கலாம் ; (எல்லாம்) எனை ஆளும் ஈசன் செயல்- இவை எல்லாம் என்னை ஆட்கொண்டுள்ள இறைவனின் செயலே ஆகும்.

நாம் நினைக்கிறபடியே எதுவும் நடப்பதில்லை. ஆண்டவன் சித்தப்படியே யாவும் நடக்கின்றன.

**28. உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்**
**எண்பது கோடி நினைந்து எண்ணுவன — கண்புதைந்த**
**மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம்போலச்**
**சாந்துணையும் சஞ்சலமே தான்.**

உண்பது — சாப்பிடுவது ; நாழி — ஒரு படி அரிசிச் சோறு; உடுப்பது —உடுத்துவது ; நான்கு முழம் - நான்கு முழத்துணி ; நினைந்து

எண்ணுவன — நினைத்து எண்ணும் காரியங்களோ ; எண்பது கோடி; கண்புதைந்த — கண்மூடிகளான; மாந்தர் - இந்த மனிதர் தம்; வாழ்க்கை— வாழ்க்கையானது; மண்ணில் கலம்போல — மண்பாண்டம் போல; சாம் துணையும் - சாகும்வரை; சஞ்சலமே — துன்பமே. (விளையும்)

கிடைத்தது கொண்டு மனம் மகிழாதவர் சாகும்வரை சஞ்சலமே அடைவர்.

**29. மரம் பழுத்தால் வௌவாலை வாவென்று கூவி**
**இரந்து அழைப்பார் யாரும் அங்கில்லை — சுரந்து அமுதம்**
**கற்றா தரல் போல் கரவாது அளிப்பரேல்**
**உற்றார் உலகத் தவர்.**

**பதவுரை:-** மரம் பழுத்தால் - மரம் பழுத்தால்; வௌவாலை - வௌவாலை; வா என்று கூவி —, வா என்று சொல்லி; இரந்து — உபசரித்து; அழைப்பார் - அழைப்பவர்; யாரும் - எவருமே; அங்கு இல்லை ஆம்- மரத்தடியில் இல்லையாம்; கன்று — கன்றுக்கு; சுரந்து அமுதம் - பாலைச் சுரந்து; ஆ தரல் போல் - பசு கொடுப்பது போல்; கரவாது அளிப்பரேல் - ஒளியாது கொடுத்தால்; உலகத்தவர் - உலகத்தில் உள்ள எல்லோருமே ; உற்றார் - வௌவாலைப்போல் வந்து உறவினராவர்.

கொடையாளரிடம் எல்லோரும் வலியச்சென்று உறவு கொண் டாடுவது இயல்பு.

**30. தாம்தாம் முன்செய்த வினைதாமே அநுபவிப்பார்**
**பூந்தாமரையோன் பொறி வழியே — வேந்தே**
**ஒறுத்தாரை என் செயலாம் ஊரெல்லாம் ஒன்றா**
**வெறுத்தாலும் போமோ விதி.**

**பதவுரை:-** வேந்தரே — அரசனே; தாம்தாம் - ஒவ்வொருவரும் ; முன் செய்த வினை — முற்பிறப்பிலே செய்த நல்வினை தீவினைகளை; பூந்தாமரையோன் பொறி வழியே — தாமரைப் பூவில் இருக்கும் பிரமன் விதிப்படி; தாமே அநுபவிப்பர் -அவர் அவர் தாமே அநுபவிப்பார்கள்; ஒறுத்தாரை என் செயலாம் - தீவினை செய்பவர்களை என்ன செய்ய முடியும்? ஊர் எல்லாம் ஒன்றா — ஊரெல்லாம் ஒன்றாகக் கூடி ; வெறுத்தாலும் - வெறுத்தாலும் ; போமோ — விதி போகுமா? போகாது.

தனக்கு ஒருவனால் துன்பம் நேர்ந்தாலும் அது முன் பிறப்பில் தான்செய்த தீவினைப் பயன் என்று அமைதியாக இருப்பதே அறிவுடைமை.

31. **இழுக்கு உடைய பாட்டிற்கு இசை நன்று சாலும்**
**ஒழுக்கம் உயர்குலத்தின் நன்று – வழுக்குடைய**
**வீரத்தின் நன்று விடாநோய் பழிக்கஞ்சாத்**
**தாரத்தின் நன்று தனி.**

**பதவுரை:-** இழுக்குடைய – இலக்கண வழுவுடைய; பாட்டிற்கு- செய்யுளைவிட இசை நன்று – வெறும் சப்தமே நல்லது; உயர்குலத்தின்- உயர்ந்த குலம் என்று சொல்லிக் கொண்டிருப்பதை விட; சாலும் ஒழுக்கம் நன்று– நல்ல ஒழுக்கத்துடன் இருப்பதே நல்லது ; வழுக் குடைய – தவறுமிக்க; வீரத்தின் - வீரத்தை விட; விடாநோய் - தீராத வியாதி; நன்று – நல்லது; பழிச் சொல்லுக்கு அஞ்சா – பழிக்கு அஞ்சாத; தாரத்தின் - மனைவியுடன் கூடி வாழ்வதைவிட, தனி நன்று – தனியாக வாழ்வது நன்று.

பிழையுள்ள பாட்டும், ஒழுக்கமில்லாத உயர்குலமும், தவறுதலான வீரமும், கற்பில்லாத மனைவியுடன் கூடிய வாழ்வும் தீராத வசை தரும்.

32. **ஆறிடும் மேடும் மடுவும் போலாம் செல்வம்**
**மாறிடும் ஏறிடும் மாநிலத்தீர் – சோறிடும்**
**தண்ணீரும் வாரும்: தருமமே சார்பாக**
**உண்ணீர்மை வீறும் உயர்ந்து.**

**பதவுரை:-**மா நிலத்தீர் - இந்தப் பெரிய நில உலகில் வாழும் மக்களே; செல்வம் - செல்வம் ; ஆறு இடும் - ஆற்று வெள்ளத்தில் தோன்றும்; மேடும் மடுவும் போலாம் - மேடு பள்ளம் போன்று உயரும் தேயும்; (ஆகவே) சோறு இடும் - எல்லாருக்கும் உணவு அளியுங்கள்; தண்ணீரும் வாரும் - தண்ணீர் கொடுங்கள்; தருமமே சார்பாக - இவ் விதம் செய்யும் நல்ல காரியத்தின் பயனாக; உண் நீர்மை உயர்ந்து வீறும்- உள்ளத்திலே ஒழுக்கம் ஓங்கி விளங்கும்.

செல்வம் நிலையற்றது. எனவே, செல்வம் வந்தபோது எல்லாருக்கும் சோறும் நீரும் அளித்தால் நன்மை பெறலாம்.

**33. வெட்டெனவை மெத்தெனவை வெல்லாவாம் வேழத்தில்**
**பட்டு உருவும் கோல் பஞ்சில் பாயாது – நெட்டிருப்புப்**
**பாரைக்கு நெக்கு விடாப் பாறை பசு மரத்தின்**
**வேருக்கு நெக்கு விடும்.**

வேழத்தில் - யானைமீது; பட்டுஉருவும் கோல் - பட்டு உருவும் அம்பு; பஞ்சில் பாயாது – பஞ்சுப் பொதியில் பாயாது; நெடு – நீண்ட; இருப்புப் பாரைக்கு - இரும்பினால் ஆன கடற்பாறைக்கு; நெக்குவிடா– பிளவு படாத; பாறை – கற்பாறை ; பசு மரத்தின் - பச்சை மரத்தின்; வேருக்கு நெக்கு விடும் - வேருக்குப் பிளந்து கொடுக்கும் (எனவே) வெட்டெனவை – வெடுக்கென்ற பேச்சு; மெத்தெனவை வெல்லாவாம் - இனிமையான பேச்சை வெல்லாது (தோற்கும்).
சுடுசொல் வெற்றி பெறாது தோற்கும்; இன்சொல்லே வெற்றி தரும்.

**34. கல்லானே ஆனாலும் கைப் பொருள் ஒன்று உண்டாயின்**
**எல்லாரும் சென்று அங்கு எதிர்கொள்வர் - இல்லானை**
**இல்லாளும் வேண்டாள்; மற்று ஈன்றெடுத்த தாய் வேண்டாள்**
**செல்லாது அவன் வாயிற் சொல்.**

கல்லானே ஆனாலும் - கல்வி அறிவு இல்லாதவனே யானாலும்; கைப்பொருள் - கையிலே பொருள்; ஒன்று உண்டாயின் - ஒன்று மாத்திரம் இருக்குமானால் ; எல்லோரும் - எல்லாரும் ; . சென்று – போய்; எதிர்கொள்வர் - எதிர்கொண்டு அழைப்பார்கள்; இல்லானை – பொருள் இல்லாதவனை; இல்லாளும் - மனைவியும்; வேண்டாள் - விரும்பமாட்டாள்; ஈன்று எடுத்த - பெற்றெடுத்த; தாய் வேண்டமாட்டாள்- தாயும் விரும்பாள்; செல்லாது அவன் வாய்ந்த சொல் - அவன் கூறும் சொல்லுக்கு மதிப்பு இராது.

படிப்பில்லாவிட்டாலும் பணமிருந்துவிட்டால் போதும்; எல்லாரும் மதிப்பர். படித்தவனாயினும் பொருள் இன்றேல் ஒருவரும் மதிக்கமாட்டார்.

**35. பூவாதே காய்க்கும் மரமும் உள மக்கள் உளும்**
**ஏவாதே நின்று உணர்வார் தாம் உளரே – தூவா**
**விரைத்தாலும் நன்றாகா வித்தெனவே பேதைக்கு**
**உரைத்தாலும் தோன்றாது உணர்வு.**

பூவாதே – பூவாமலே; காய்க்கும் - காய்க்கின்ற; மரமும் உள – மரங்களும் உள்ளன; மக்கள் உளும் - மனிதர்களிலும்; ஏவாதே – சொல்லாமலே; நின்று தாம் உணர்வார் - இருந்து தாமே

அறிந்து செய்ய வல்லார்; உளரே - இருக்கின்றனர்; தூவா விரைத்தாலும் - நன்றாகத் தூவி விதைத்தாலும்; நன்று ஆகா வித்து எனவே — நன்கு முளையாத விதை போல; பேதைக்கு - மூடனுக்கு; உரைத்தாலும் - எடுத்துக் கூறினாலும்; தோன்றாது உணர்வு — அறிவு தோன்றாது.

மரங்களிலே பூவாமல் காய்ப்பவையும் உண்டு. மக்களிலும் குறிப்பாக அறிபவர் உளர். என்ன சொன்னாலும் தெரியாதவரும் உள்ளனர்.

**36. நண்டு சிப்பி வேய் கதலி நாசமுறும் காலத்தில்**
**கொண்டகரு அளிக்கும் கொள்கைபோல் - ஒண்தொடி**
**போதம் தனம்கல்வி பொன்றவரும் காலம் அயல்**
**மாதர்மேல் வைப்பார் மனம்.**

ஒண்தொடி — ஒளி பொருந்திய வளையலை அணிந்தவளே; நண்டு, சிப்பி, வேய், கதலி — நண்டும், முத்துச் சிப்பியும், மூங்கிலும், வாழையும்; நாசமுறும் காலத்தில் - தாம் அழியும்போது; கொண்ட கரு அளிக்கும் - உள்ளே கொண்ட கருவை ஈனும்; (அதேபோல) போதம், தனம் கல்வி — ஞானமும் செல்வம், வித்தை, இவை; பொன்ற வரும் காலம் - அழியும் காலத்திலே; அயல் மாதர் மேல் வைப்பார் மனம் - பிற பெண்கள் மீது கருத்துச் செலுத்துவார்கள்.

ஒருவனது அறிவு, செல்வம், கல்வி எல்லாம் அழியும் காலத்திலே அவன் பிறர் மனைவியரை விரும்புவான்.

**37. வினைப் பயனை வெல்வதற்கு வேதம் முதலாம்**
**அனைத்தாய நூலகத்தும் இல்லை — நினைப்பது எனக்**
**கண்ணுறுவது அல்லால் கவலைப்படேல் நெஞ்சே மெய்**
**விண்ணுறுவார்க்கு இல்லை விதி.**

வினைப்பயனை — முன்பிறவியில் செய்த தீவினையின் பயனை; வெல்வதற்கு — வெற்றிகாண்பதற்கு; வேதம் முதலாம் - வேதம் முதலிய; அனைத்தாய நூலகத்தும் - எல்லா நூல்களிலும்; இல்லை— வழி இல்லை; மெய் விண் உறுவார்க்கு — நித்தியமாக மெய்வீடாகிய முத்தி நெறியில் பத்தியுடன் நிற்பவர்க்கு; நினைப்பது எனக் கண் ணுறுவது அல்லால் - அவர் நினைப்பது போல் தோன்றுமே அன்றி; விதி இல்லை — விதி என்று ஒன்றும் இல்லை.
வினைப்பயனை வெல்வதற்கு ஈசுவர தியானமே வழி.

**38. நன்று என்றும் தீது என்றும் நான் தான் என்றும்**
**அன்று என்றும் ஆம்என்றும் ஆகாதே — நின்றநிலை**
**தானதாம் தத்துவமாம் சம்பறுத்தார் யாக்கைக்குப்**
**போனவா தேடும் பொருள்.**

நன்று என்றும் - இது நல்லது என்றும்; தீது என்றும் - இது தீயது என்றும்; நான் என்றும் - இதை நான் செய்தேன் என்றும்; தான் என்றும் - இது அவன் செய்தது என்றும்; அன்று என்றும் - இது அல்லாதது என்றும்; ஆம் என்றும் - இது தேவை என்றும்; ஆகாதே— பேதமில்லாது. நின்றநிலை - இரண்டறக் கலந்து நின்ற நிலையே. தான் அதுவாம் தத்துவமாம் - தான் அதுவாகும் உண்மைநிலையாகும்; தேடும் பொருள் - மெய்ப்பொருளாகிய இறைவன் எங்கேயோ இருப்பதாக எண்ணித் தேடுவது; (எதுபோல?) சம்பு அறுத்தவர் - சம்பா நெல்லை அறுத்தவர்; யாக்கைக்கு — அந்த கட்டைக் கட்டுவதற்கு (அந்தத் தாளையே உபயோகிக்கலாம் என்று அறியாது வேறு கயிறு தேடி); போனவர் - போனதை ஒக்கும்.

உயிர் உள்ளே ஆண்டவனைக் கண்டு பேதமின்றிக் கலத்தலே உண்மையான நிலை. அதை விடுத்து ஆண்டவனைத் தேடிச் செல்வது அறியாமை.

**39. முப்பதாம் ஆண்டு அளவில் மூன்றற்று ஒரு பொருளை**
**தப்பாமல் தன்னுள் பெறான் ஆயின் - செப்பும்**
**கலைஅளவே ஆகுமாம் காரிகையார் தங்கள்**
**முலை அளவே ஆகுமாம் மூப்பு.**

முப்பதாம் ஆண்டு அளவில் - முப்பது வயது ஆகும் போது; மூன்று அற்று - மூன்றுவித ஆசைகளையும் நீக்கி; ஒரு பொருளை — ஒரே பொருளாகிய இறைவனை; தப்பாமல் பெறான் ஆயின் - தவறாது சிந்திக்கப் பெறாது போனால், காரிகையார் - பெண்களினுடைய; மூப்பு— உயர்நிலைமை; தங்கள் முலை அளவே ஆகுமாம் - தம்முடைய தனத்தின் பாரங்களுக்கு ஒப்ப இருப்பதைப்போல; செப்பும் கலை அளவே யாகுமாம்- கிளிப்பிள்ளைபோல் கற்றதையே திருப்பித் திருப்பிக் கூறிக் கொண் டிருக்கும் அளவில் தான் இருப்பான். இன்பம் பெறமாட்டான்.

முப்பது வயதுக்குள் காம வெகுளி மயக்கங்களை ஒழித்துக் கடவுளை அடையும் மார்க்கத்தில் ஈடுபடல் வேண்டும்.

40. **தேவர் குறளும் திருநான் மறை முடிவும்**
**மூவர் தமிழும் முனிமொழியும் - கோவை**
**திருவாசகமும் திருமூலர் சொல்லும்**
**ஒருவா சகம் என்று உணர்.**

தேவர் - திருவள்ளுவ நாயனாரின்; குறளும் - திருக்குறளும்; திரு நான்மறை முடிவும் - திரு மறைகள் நான்கின் முடிவாகிய உப நிடதமும் ; மூவர் தமிழும் - அப்பர், சுந்தரர், சம்பந்தர் ஆகிய மூவர் பாடல்களும்; முனிமொழியும் - துறவியாகிய மாணிக்கவாசகர் மொழிந்த கோவை, திருவாசகமும் - திருக்கோவையாரும், திருவாசகமும்: திருமூலர் சொல்லும் - திருமூலர் திருமந்திரமும்; ஒரு வாசகம் என்று உணர் - ஒரே கருத்தைக் கூறுவன என்று அறி.

திருக்குறள். திருவாசகம், திருமூலர் திருமந்திரம், தேவாரம். திருக்கோவையார், உபநிடதங்கள் முதலியன எல்லாம் ஒரு பொருளையே கூறுவனவாம்.



வெளியீடு : இனிய தென்றல் பப்ளிகேஷன்,
இல. 135, கனல் பாங் வீதி, கொழும்பு 06.
தொலைபேசி : 011 2360239

Printed by : Devi Printers 0112434534